**மோட்டார் வாகன விபத்துக்கள் இழப்பீட்டுத் தீர்ப்பாயம்,**
**சார்பு நீதிமன்றம், வள்ளியூர்**
**மோ.வா.வி.கோ.மனு எண். 17 /2019**

பெயர் – ரவி செல்வி எ.ம.சா.1

த/பெ –

கிராமம் –

தாலுகா –

தொழில் –

ஜாதி –

மதம் –

வயது –

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ம் நாள் மேற்படியாரிடமிருந்து சத்தியத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை : –**

நான் வள்ளியூர் மோட்டார் ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளர் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அங்கீகாரம் கொடுத்துள்ளார் அதற்கான கடிதம் தாக்கல் செய்கிறேன் அது **சா.சா.ஆ.1**

2. விபத்து வாகனமான TN 72 BZ 8208 வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை உண்மை நகலை தாக்கல் செய்கிறேன் அதில் ராமையா தகப்பனார் பெயர் நயினார் , கதவு எண்.42, அம்மன் கோவில் தெரு, கேசவனேரி என்ற முகவரியில் உள்ள நபருக்கு ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது அந்த மோட்டார் வா கன ஆய்வாளர் அறிக்கை **சா.சா.ஆ.2.**

3. ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்பதால் வட்டார போக்குவரத்து அவருக்கு சோதனை அறிக்கை வழங்கியுள்ளார் அந்த சோதனை அறிக்கை **சா.சா.ஆ.3.**

4. சோதனை அறிக்கை அடிப்படையில் உரிமையாளர் ஜெயபால் ரூ.1000/- அபராதம் செலுத்தினார் அதற்கான ரசீது **சா.சா.ஆ.4**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

சா.சா.ஆ.4 ல் ஓட்டுநர் ராமையாவுக்கு அபராதம் விதிக்கவில்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.4 படி ராமையா வண்டியை ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தியதற்காக அபராதம் விதிக்கப்பட்டது என்பது துலங்காது என்றால் சரிதான். சா.சா.ஆ.2 ல் ஓட்டுநர் உரிமம் சமர்பிக்கப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை -</u>**இல்லை